செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 430 நாள் : 20/7/17

# பத்திரிக்கை செய்தி

## வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டப் பயனாளிகளுக்கு வருவாய் ஆவணங்கள் வழங்கும் சிறப்பு முகாம்

வேலூர் மாவட்டத்தில் தமிழக அரசால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை முலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களிலும் சிறு/ குறு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது

அரசு திட்டங்களில் பயன்பெற விரும்பும் விவசாய பெருமக்கள் உடனடியாக, கணினி சிட்டா, அடங்கல், நிலவரைப்படம் மற்றும் சிறு/குறு விவசாயி சான்று ஆகிய ஆவணங்கள் பெற்றிட ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் 22.07.2017 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் 28.07.2017 மாலை 5.00 மணி வரை 7 நாட்கள் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இச்சிறப்பு முகாமில் கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டு தகுதியான விவசாயிகளுக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள வருவாய் ஆவணங்கள் வழங்கப்படவுள்ளது.

மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்ந்த அலுவலர்கள் இந்த சிறப்பு முகாமில் கலந்துக்கொண்டு சிறு/குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனம் திட்டத்திற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள உள்ளார்கள்.

எனவே விவசாய பெருமக்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி இச்சிறப்புமுகாமிற்கு வருகை புரிந்து பயனடைமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

20/7/17